அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief
Dr PRIYAKRISHNAN

Publisher
MR P. JAYAKRISHNAN

Editorial Board Members
Dr V SELVAKUMAR
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya
Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy
Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

சங்க இலக்கியத்தில் காற்று

Air in Sangam literature

அ.கிருஷ்ணமூர்த்தி, முனைவர் பட்ட ஆய்வாளர்

(Ref. No. BDU2010632778754/Confirm/dt: 07.12.2020)

தமிழாய்வுத்துறை, மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தத்தனூர்,

அரியலூர் மாவட்டம் — 621 805, தமிழ்நாடு, இந்தியா. (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

A. Krishnamoorthy, *Ph.D. Research Scholar, Department of Tamil,*

Meenakshi Ramasamy Arts & Science College,Thathanur, Ariyalur-621805, Tamilnadu, India.

(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

ORCid: https://orcid.org/0009-0004-1489-1518

முனைவர் கு.சந்திரசேகரன், உதவிப் பேராசிரியர் - ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத்துறை,

மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தத்தனூர், அரியலூர் மாவட்டம் — 621 805,

தமிழ்நாடு, இந்தியா. (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

Dr. G. Chandrasekaran, *Research Supervisor, Assistant Professor, Department of Tamil,*

Meenakshi Ramasamy Arts & Science College,Thathanur, Ariyalur-621805, Tamilnadu, India.

(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

ORCid: https://orcid.org/0009-0008-4013-0578

Abstract

The science that governs human life both internally and externally is developing amazingly every day. We can know that our forefathers have been the pioneers in this field through the Palanthamil grammar literature that they have given us. The main purpose of human endeavor is to find the truth. Human society has been trying for ages to find this truth. It is strange that Tamil literature has scientific ideas in the environment where science and technology have developed in order to carry out this effort. As such, astronomy is a very ancient science. Astronomy arose in ancient times based on the prediction of the periodic motion of space objects. Looking at the entire history, these periodic motion predictions have been used for predicting time, knowing the season, determining the direction of sea travel, etc. Among them, this article takes astronomical messages about air through ancient literature that today's astronomers have discovered in scientific development two thousand years ago.

Keywords: Wind, weather, climate, monsoons, trade winds.

ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்வில் அகத்தும் புறத்தும் ஆட்சி செய்யும் அறிவியல் நாள்தோறும் வியக்கும் வகையில் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இத்துறையில் முன்னோடியாக நம் முன்னோர்கள் விளங்கி உள்ளனர் என்பதை அவர்கள் நமக்களித்துள்ள பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது. மனித முயற்சியின் முக்கியமான நோக்கம் உண்மை காண்பது தான். இவ்வுண்மையைக் காணும் முயற்சியிலேயே மனித சமுதாயம் காலங்காலமாக முயன்று வருகிறது. அறிவியல், விஞ்ஞானம் வளர்ந்த இக்காலச் சூழலில் இம்முயற்சியை மேற்கொள்வது பொருட்டன்று எவ்விதக் கருவி வளர்ச்சியும் முழுமையடையாத அவ்வக்காலச் சூழலில் தமிழ் இலக்கியங்கள் அறிவியல் சார்ந்த சிந்தனைகளைக் கொண்டிருப்பதுதான் விந்தை. அந்தவகையில் வானியல் மிகவும் பழமை வாய்ந்த ஓர் அறிவியல் ஆகும். விண்வெளி பொருட்களின் காலவட்ட இயக்கத்தை உற்றுநோக்கிக் கணித்ததன் அடிப்படையில் பழங்காலத்தில் வானியல் தோன்றியது முழு வரலாற்றை நோக்கும் போது இந்த காலவட்ட இயக்க கணிப்புகள், நேரத்தைக் கணித்தல், பருவத்தை அறிதல், கடல் பயண திசை அறிதல் முதலியவற்றிற்குப் பயன்பட்டுள்ளன. அவற்றில் இன்றைய வானியல் அறிஞர்கள் விஞ்ஞான வளர்ச்சியில் கண்டறிந்தவற்றை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்துள்ளனர் என்பதை பண்டைய இலக்கியங்கள் மூலம் காற்று பற்றிய வானியல் செய்திகளை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

கருவிச்சொற்கள்: காற்று, வானிலை, காலநிலை, ஐம்பெரும்பூதங்கள், வாணிகக் காற்றுகள்.

முன்னுரை

வானிலை என்னும் சொல் வளிமண்டலம் எவ்வாறு உள்ளது என்பதைத் தெரிவிக்கும் சொல்லாகும். அதாவது பூமியை ஒட்டியுள்ள காற்று அல்லது வளிமண்டலம் வெப்பமாக உள்ளதா? குளிரா உள்ளதா? ஈரமாக அல்லது உலர்ந்து உள்ளதா? அல்லது புயல் வீசுகிறதா? வானம் மேகமற்று உள்ளதா? அல்லது மேகமூட்டமாக உள்ளதா? என்பதற்கு,

> ‘‘தனி இடத்தனிவேளை வளிமண்டல நிலை, ஈரப்பதக் குளிர்வாடை நிலை, காற்றின் திசை, காற்று விசையாலையின் பாய்த்திரையின் சாய்கோண அளவு’’ (சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில - தமிழ் சொற்களஞ்சியம்)

என்று பலவிதமாக பொருளளிக்கப்பட்டுள்ளது. எனவே வானிலை என்பதனை ஒரு குறிப்பிட்ட இடத்தின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உள்ள வானிலைக் கூறுகளின் தொகுப்பு எனலாம். எடுத்துக்காட்டாக தஞ்சையில் காலை எட்டு மணிக்கு நிலவும் வெப்பநிலை, ஈரப்பதம், காற்றழுத்தம், காற்றின் திசைவேகம், பார்வைத்தூரம், மேகங்களின் வகைகள், அளவு, உயரம் ஆகியவை பற்றிய தகவல்கள் மற்றும் அந்நேரத்தில் மழை, இடி, பனி ஆகியவை உள்ளனவா? என வரும் வானிலைக் கூறுகளின் தொகுப்பே தஞ்சையின் அப்போதைய வானிலையாகும்.

காலநிலை விளக்கம்

காலநிலை என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் கிளைமேட் (Climate) ஆகும். கிளைமேட் என்ற ஆங்கிலச் சொல் தட்ப வெப்பநிலை, காலப்போக்கு, சமுதாயச் சூழ்நிலை, அமைதி, காலசூழ்நிலை அமைதி, பண்பாட்டமைதி எனப் பொருளுடையது (*சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில - தமிழ் சொற்களஞ்சியம்*)

வானிலையியல் கலைச்சொல் அகராதி இதனை காலநிலை எனக் குறிப்பிடுகிறது. இவ்வகராதியில் வேளாண் காலநிலை, செயற்கை காலநிலை, மிதவெப்ப மண்டல காலநிலை, பரந்த காலநிலை, பருவகாற்றுக் காலநிலை, மலைப்பகுதி காலநிலை, காலநிலை மண்டலம் ஆகியவையும் சுட்டப்படுகின்றன.

காலநிலை என்பது ஒர் பெரிய பகுதியின் ஓர் பெரிய கால அளவில் சராசரியாக வானிலை எவ்வாறு இருந்தது என்பதனைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, சனவரி, பிப்ரவரி மாதங்களில் தமிழகம் குளிர்ந்த காலநிலையோடு பெரும்பாலும் மழையின்றி தெளிவான வானத்தோடு காணப்படும் என்பது தமிழகத்தின் குளிர்கால காலநிலையைக் குறிப்பிடுகிறது.

வானிலை, காலநிலை வரையறை

வானிலை என்பது வெதல் (Weather) என்னும் காலநிலை என்பது கிளைமேட் (Climate) என்றும் ஆங்கிலத்தில் வழங்கப்படுகின்றன.

வானிலை, காலநிலை ஆகியவை பற்றிய கல்வியினை மெடியராலாஜி (Metrology) என்ற ஆங்கிலச் சொல்லால் அழைக்கின்றனர். காலநிலை பற்றிய கல்வி காலநிலையியல் என்ற ஒரு தனித்துறையாக கிளைமேடாலஜி (Cimatology) என்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடப்படுகிறது. மெடியராலாஜி என்ற ஆங்கிலச் சொல்லுக்கு,

வானிலையாய்வு நூல், வருங்குறி அறிவிக்கும் நோக்குடைய வானிலை நிகழ்வியக்க ஆராய்ச்சித்துறை என்பது பொருளாகும் (*சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழ் களஞ்சியம்*)

ஐம்பெரும்பூதங்கள்

உலகம், மண், ஆகாயம், காற்று, தீ, நீ ஆகிய ஐம்பெரும் பூதங்களும் ஆனது என்பது அறிவியல். மேலும் மண்திணிந்துள்ள நிலத்தின் பொருண்மை, புவியைச் சூழ்ந்துள்ள வானம், வானத்தைச் சூழ்ந்து வரும் காற்று, காற்றுடன் கலந்து எரியும் தீ, தீயைத் தணிக்கக்கூடிய நீர் என ஐம்பெரும்பூதங்களால் ஆனதாகப் புவி குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

மண் திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு

ஐம்பெருங் பூதத்து இயற்கை (புறம்., பா.2:1-6)

என்று புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகிறது.

வானின் மத்தியப் பகுதியில் நட்சத்திரங்கள் இருக்கக் கூடும். ஆனால் அந்த நட்சத்திரங்களைச் சுற்றி ஒருவகைத் தூள் பரவியுள்ளது என்றும் அதில் பனிக்கட்டித் தூளும் பனிக்கிட்டியும் தான் உள்ளே உள்ள நட்சத்திரங்களைக் காண முடியாமல் தடுத்து விடுகின்றன. இவை சில நூறாற்றாண்டுகளுக்கு முன் கண்டறியப்பட்ட உண்மைகள் ஆகும். ஆனால் இதனைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பரிபாடலில்,

கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழுழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்
நுண்முறை வெள்ள மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி அவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத் தூழியும் (பரி.2:5-12)

என்னும் அடிகளில் வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயம் தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றியமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நெருப்புக் கோளமாக இருந்த பூமி குளிர்ந்து, பனி படலத்தால் சூழப்பட்ட நிலைமாறி நிலம் தோன்றியது என்பதும் அவை நிகழப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆயின என்றும் பரிபாடல் கூறுகிறது.

இதனை ஹோய்ஸ் என்னும் 19 ஆம் நூற்றாண்டு அறிஞர், விண்வெளியில் நட்சத்திரங்களுக்கிடையே ஏராளமான ஹைட்ரஜன் வாயு பரவிக் கிடக்கின்றது என்கிறார். மேலும் பிரபஞ்சத்தில் உள்ள மூலங்களில் ஹைட்ரஜன் தான் உயர்ந்த பட்ச அளவில் கிடைக்கிறது. நட்சத்திரங்கள் வெப்பமும் சக்தியும் வெளியாகக் காரணமாக உள்ள எரிபொருள் ஹைட்ரஜன், ஹைட்ரஜன் மட்டும் இல்லாவிடில் பிரபஞ்சம் குளிர்ந்துவிடும் எனவும் குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியத்தில் காற்று

சங்க இலக்கியங்களில் காற்று, வளி, கடுவளி, வெந்திறல் கடுவளி, வரைவளி, அசைவளி, ஆடுவளி, எதிர்வளி, உறுவளி, எரிவளி, உர்தரு தண்வளி, போழ்வளி, துகள் தொகுத்து எறிவளி, வடத்தைத் தண்வளி, வளி மறை, கால், கடுங்கால், காற்று, சில்காற்று, கடுங்காற்று, குடகாற்று, ஊதை, வாடை, வாடை அசைவரல் வாடை, அருள் இல்வாடை, இருங்குளிரிர் வாடையோடு, இன்னாவாடை, தண்தரல்வாடை, தண்வரல்வாடை, பெருந்தண்வாடை, வடந்தை, கொண்டல், கோடை, கோடை அவ்வளி, அழல்எறி கோடை, உதிர்த்த கோடை, உதைத்த கோடை, வறந்த கோடை, ஞெமை இலை உதிர்த்த எரிவாயக்கோடை, வங்கூழ், தென்றல் ஆகிய சொற்களால் குறிப்பிடப்படுகிறது.

காற்று எந்தத் திசையிலிருந்து வீசுகின்றது என்பதைக் குறிக்கவும். சங்க இலக்கியப் புலவர்கள் தனித்தனிச் சொற்களைப் பயன்படுத்தினர். வாடை, வடந்தை, ஊதை என்ற சொற்கள் வடக்கிலிருந்து வீசும் காற்றினைக் குறிப்பிடப் பயன்பட்டன. கொண்டல் என்ற சொல் குண திசையான கிழக்கிலிருந்து வீசும் காற்றினையும், கோடை என்ற சொல் குட திசையான மேற்கிலிருந்து வீசும் காற்றினையும், தென்றல் என்ற சொல் தெற்கிலிருந்து வீசும் காற்றினையும் குறிப்பிடப் பயன்பட்டன. இந்த சொற்கள் காற்று எத்திசையிலிருந்து வருகிறது என்பதனையே குறித்தன என்பது இங்கே குறிப்பிடத்தகுந்தது.

காற்றின் வலிமை

காற்று திடீரென வலு பெற்றால் அதனைத் தடுக்க உடனடியாக எந்தவித ஏற்பாடும் செய்யவியலாது. இதனைச் சங்ககாலப் புலவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். பாண்டியன் ஊடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியை ஐயூத் முடவனார் புகழ்ந்து பாடும்போது,

வளி மிகின் வலியும் இல்லை (புறம்.51:3)

என்று புறநானூற்றுப் பாடலொன்றில் குறிப்பிடுகிறார். பாலை பாடிய பெருங்கடுங்கோ நெய்தற்கலியில் நம்முடைய வாழ்நாள் நிலையில்லாதது. அது காற்றின் தன்மையான வேகம், திசை ஆகியவற்றை எவ்வாறு வரையறுத்துக் கூறவியலாதோ அது போன்றதே என்பதனை,

நிலம், நீர், வளி, விசும்பு என்ற நான்கின்
அளப்பு அரியையே (பதிற்.1-3)

என்ற பாடல் வரிகளால் குறிப்பிடுகிறார். தீ காற்று இரண்டின் ஆற்றலையும், ஆகாயம் கொண்டுள்ளது எனப் புதுக்கயத்து வண்ணக்கண் கம்பூர்க்கிழான் என்ற புலவர்,

தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு (நற்.294:1)

என்று நற்றிணையில் குறிப்பிடுகிறார். தீயை வெளிப்படுத்தும் மின்னலையும் வளிமண்டலம் முழுவதும் பரவியுள்ள காற்றையும் பற்றி சங்ககாலப் புலவர்களின் அறிவையே இவை சுட்டுகின்றன.

சங்க இலக்கியம் குறிப்பிடும் காற்று

காற்று வீசும்போது இலைகளும் குச்சிகளும் சரணமடையும், காற்றால் சிறு கொடிகள் விரிந்து பறக்கத் தொடங்கும். கடலில் சற்றே பெரிய அலைகள் தோன்றும். அலைகளின் முகடுகள் உடைய ஆரம்பிக்கும். அலைகளில் ஆங்காங்கே வெந்நிரைப் பலம் தெரியத் தொடங்கும். காற்றின் இந்த நிலையை விவரிக்கும் பாடல்களும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. புல்லியை இலைகளை உடைய ஓமை மரத்தின் காய்கள் காற்றால் ஒன்றோடொன்று மோதுவதால் அருவி போன்ற ஓசை ஏற்படுவதே நற்றிணை பாடலொன்று.

செல் வளி தூக்கலின் இலைதீர் நெற்றம்
கல் இழி அருவியின் ஒல்லென ஒலிக்கும்
புல் இலை ஓமைய. . . . . (நற்.107:4-6)

என்று குறிப்பிடுகிறது. சூழி முள்ளியின் கரிய மலர்கள் கோத்த நூலற்ற முத்துக்களைப் போல காற்றில் சிதறி விழுந்து நீர்த்துறைகள் தோறும் தூய மணற்பரப்பிற்கு அழகூட்டுகின்றன. இதனை,

கூன் முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்

நூல் அறு முத்தின் காலொடு பாறித்

துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை (குறுந்.51:1-3)

எனக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. சுழன்று வரும் மேல் காற்றினால் முருங்கையின் பூக்கள் ஆலங்கட்டிகள் போல பரந்து உதிர்ந்து கிடத்தலை,

உருப்பு அவிர்பு உளரிய சுழன்று வரு கோடை

புன் கால் முருங்கை ஊழ் கழி பல் மலர்

தண் கார் ஆலியின் தூவன உதிரும் (அகம்.101:14-16)

என்று அகநானூறு சுட்டுகின்றது. ஒக்கூர் மாசாத்தியார் அகநானூற்றில் முல்லைத்திணைப் பாடலொன்றில் காற்று வீசுதலால் கிளைகளினின்று சிச்சிலிப் பறவையின் சிறகுகள் போன்ற மலர்கள், கருமணல் கொண்ட நிலத்தின்மீது உதிர்ந்து வீழ்ந்து அழகு செய்வதை,

வளிசினை உதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்

சிரற்சிறகு ஏய்ப்ப அறற் கண் வரித்த

வண்டு உண் நறுவீ (அகம்.324:9-11)

என்று குறிப்பிட்டுள்ளார். அச்சம் தரும் கானகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசும் காற்றானது கிளைகளில் மோதுவதால் இருப்பை மரங்களின் பூக்கள் உதிர்ந்து கீழே சிதறி விழுகின்ற காட்சியைப் பெருங்கடுங்கோ அகநானூற்றுப் பாலைநிலப் பாடலொன்றில்,

சினைபாய்ந்து உதிர்த்த கோடை (அகம்.267:5)

எனக் குறிப்பிட்டுள்ளார். காட்டில் வளர்ந்த இருப்பை மரத்தினது. வேனிற்காலத்தில் வரும் வெள்ளிய பூக்கள். நெடிய கிளைகளைக் காற்று மோதுவதால் ஆர்க்குக் கழன்று களிறுகள் செல்லும்வழி மறையும் படிப்பரவும் காட்சியினை,

கான இருப்பை வேனில் வெண்பூ

வளி பெரு நெடுஞ்சினை உஞற்றலின் (குறுந்.329:1-2)

என்று குறுந்தொகையில் ஓதலாந்தையார் பாடியுள்ளார். கீழைக் காற்றால் வீழ்த்தப்பட்ட ஒள்ளிய சிவந்த காந்தள் மலர்கள் பாறையின் மேல் வீழ்ந்து கிடத்தல் பற்றி,

கொண்டலின் தொலைந்த ஒண்செங் காந்தள்

கல்மிசைக் கவியும் நாடற்கு (குறுந்.125:6-7)

எனக் குறுந்தொகையில் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரும், பொழுது குறையும் மாலைக்காலத்தில் தாதுக்களை உடைய அரும்புகள் அசைய பெரிய காட்டை தழுவி அசைந்து வரும் காற்றைப் போல குளிர் மணங்கள் பலவும் கமழும் ஒள்ளிய நுதலையுடைய, தலைவியைப் பற்றிப் பாடும்போது,

அல்குறு பொழுதில் தாதுமுகை தயங்கப்

பெருங்காடு வளரும் அசைவளி போல (குறுந்.273:1-2)

என அரும்புகளை அசைக்கும் காற்றினைப் பற்றிச் சிறைக்குடி ஆந்தையாரும் குறிப்பிடுகின்றனர்.

பூக்கொய்ய விரும்பும் வல்லாள் ஒருவன் கொம்பை அடித்து மலர்களை உதிரச் செய்தது போல தென்றல் மாமரத்தின் மலர்களை உதிர்த்தது பற்றி,

. . . . வல்லான்

கோடு அறை கொம்பின் வீ உகத் தீண்டி

மராஅம் அலைத்த மண வாய்த் தென்றல் (அகம்.21:10-12)

என அகநானூற்றில் காவன் முல்லைப் பூதனார் பாடுகிறார். காற்றில் நாவற்பழங்கள் உதிர்வதை காலின் உதிர்ந்தன கருனி நாவல் என மலைபடுகடாம் குறிப்பிடுகிறது.

அரசகுமாரி சினம் கொண்டவுடன் அதற்கு அஞ்சி மடப்பம் மிக்க ஆயத்தாராகிய தோழியர் எல்லாம் கை தொழுது வணங்கினாற் போல மிக்க காற்று வீசியவுடன் ஆம்பல் மலர்கள் குவிந்து தாமரை மலர்க்கு சாய்ந்து வணங்குவதை,

சுடர்த் தொடிக் கோமகள் சினந்தென ஆதன்எதிர்

மடத்தகை ஆயம் கைதொழுதா அங்கு

உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்

தாமரைக்கு இறைஞ்சும் தண்துறை ஊரன் (நற்.300:1-4)

என்று நற்றிணையில் பரணர் சுட்டிக்காட்டுகிறார். தாழைகள் தளருமாறு வீசிய காற்று பற்றி குன்றியனாரின் அகநானூற்றுப் பாடல்,

தாழை தளரத் தூக்கி மாலை

அழிதக வந்த கொண்டலோடு (அகம்.40:6-7)

எனக் குறிப்பிடுகிறது. கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் பற்றி பரணர் பாடியுள்ள பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின்காற்றால் அசையும் கொடி பற்றிய வளிமுனை அவிர் வரும் கொடி நுடங்கு தெருவில் என்ற குறிப்பு வருகிறது.

இந்நிலையைக் குறிப்பிடும் கடலலைகள் பற்றிய பாடல்களாக வாடைக் காற்றோடு கரையை மோதிக் கொண்டிருக்கும் அலைகள் பற்றிய உலோச்சனாரின் அகநானூற்று நெய்தல்திணைப் பாடல் வரியான,

பொங்குவரல் ஊதையொடு புனரி அலைப்பவும் (பதிற்.117:4)

என்பதனையும் யானைகளுக்கு உவமையாகக் கூப்பட்டுள்ள காற்றைப் பாகனாகவும் வலம்புரிச் சங்குகளைத் தந்தங்களாகவும் கொண்டு மணற்கோட்டைகளைச் சிதைக்கும் கடலலைகள் பற்றிக் குறிப்பிடும்.

துணை புணர்ந்து எழு தரும் தூநிற வலம்புரி

இணை திரள் மருப்பாக எறிவளி பாகனா (நெய்தற்கலி, 135:5)

என்ற நெய்தற்கலிப் பாடல் வரிகளும் காற்று குறுந்தடியாக அமையக் கடல் ஒலித்தாற்போல என்ற குறிப்புடைய பதிற்றுப்பத்து குறிப்பிடும்,

கால் கடிப்பு ஆகக் கடல் ஒலித்தாங்கு (பதிற்.68:1)

என்ற செல்வக் கடுங்கோ வாழியாதன் பற்றிய கபிலர் பாடிய்ள வரியும் குறிப்பிடத்தக்கன.

இலைகள் உதிர்ந்து விழுமாறு அடிக்கும் காற்று பற்றி அகநானூற்றில் பாலைத்திணைப் பாடலொன்றில் பொருந்தில் இளங்கீரனார் கதிர்பெற கழல் இலை உகுத்த கால்பொரு தாழ்சினை என்று குறிப்பிட்டுள்ளார். கோடைக்காற்று செந்நிற மூங்கிலையும் அசைப்பதையும் ஞெமை மரத்தின் இலைகளை உதிர்ப்பதையும் களர் நிலத்துப் புழுதியை வாரி எடுத்துச் சுழற்றி அடிப்பதையும் மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் அகநானூற்றில் பாலைத்திணைப் பாடலொன்றில்,

. . . . செந்நிலை

அமைஆடு அம்கழை தீண்டி கல்லென

ஞெமைஇலை உதிர்த்த எரிவாய்க் கோடை

நெடுவெண் களரி நீறுமுகந்து சுழல

கடுவெளியில் திருகிய வேனில்வெங் காட்டு (அகம்.353:8.12)

என்று பாடியுள்ளார். வானளாவிய சிகரங்களில் வெப்பம் பொருந்திய மேல் காற்றினால் நெல்விளையும் நெடில் விளையும் நெடிய மூங்கில் அசைந்தாடுவதை,

சேண்உயர்ந்து ஓங்கிய வான்உயர் நெடுங்கோட்டுக்

கோடை வெவ்வளிக்கு உலமரும்

புல்இலை வெதிர நெல்விளை காடே (அகம்.397:15-17)

என்று அகநானூற்றுக் கயமனார் பாடலால் குறிப்பிடப்படுகிறது.

காற்றினால் மோதி அடிக்கப்பட்ட கடலலைகள் கரைக்குப் பெயர்ந்து வந்து ஒலிப்பதை,

காலொடு மயங்கிய கலிழ் கடலென

மால் கடல் குடிக்கும் மழைக் குரலென (பரி.8:31-32)

என்று பரிபாடல் குறிப்பிடப்படுகிறது. திண்ணிய கொடிக் கம்பங்களில் கட்டப்பட்டுள்ள அகன்ற கொடிகளை அசைக்கும் காற்று தெளிந்த கடல் அலைகள் எழுந்து வீசுவது போல் அடிப்பதை மதுரைக்காஞ்சி,

திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம்

தென் கடல் திரையின் அசைவளி புடைப்ப (மதுரைக்.450)

எனக் குறிப்பிடுகிறது. காற்றால் மணலும் புழுதியும் பறப்பதனைச் சொல்லும் பாடல்களும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. கடற்காற்று கடற்கரை மணலை மென்மையான துகிலின் அசைவைப் போல தோன்றுமாறு ஒரு சேரத் தூற்றுவதை,

முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்

நுணங்கு துகில் நுபக்கம் போல கணம்கொள

ஊதை தூற்றும். . . . . (நற்.15:1-3)

என நற்றிணையில் அறிவுடைநம்பியின் நெய்தல்நிலப் பாடல் சுட்டுகிறது. பனைமரங்கள் மறையும் வண்ணம் காற்றால் தொகுத்தமணல் மேடு பற்றி,

பனைத்தலைக் கருக்குடை நெடுமால் குருத்தொடு மாய

கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக் (குறுந்.372:1-2)

என விற்றூற்று மூதெயினனாரும்,

. . . . கானல்

ஆடு புரை புதையக் கோடை இட்ட

அடும்பு இவர் மணற்கோடு ஊர நெடும்பனை

குறிய ஆகும். . . . . (குறுந்.248:3-5)

என உலோச்சனும் ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னை எனச் சேந்தன் கீரனும் குறுந்தொகையில் பாடியுள்ளனர். கிழக்குத் திசையிலிருந்து வடக்குத் திசையிலிருந்தும் வீசும் காற்று குவிக்கும் மணல் பற்றி,

கொண்டல் இடு மணல். . . . . . .

ஊதை ஈட்டிய உயர் மணல் அடைகரை (அகம்.20:7)

அகநானூற்றுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உழவர் தூற்றும் வைக்கோலின் துகள் காற்றால் மேலெழும்பி வானத்தை மறைப்பது பற்றி,

கங்குல் ஓதைக் கலி மகிழ் உழவர்

பொங்கழி முகந்த தாஇல் நுண் துகள்

மங்குல் வானின் மாதிரம் மறைப்ப

வைகு புலர் விடியல் வை பெயர்த்து ஆட்டி (அகம்.37:2-5)

விற்றூற்று மூதெயினனார் அகநானூற்றின் பாலைத்திணைப் பாடலொன்றில் குறிப்பிட்டுள்ளார். விரையும் காற்றில் நெல்லைத் தூற்ற பறந்து சென்ற தூசும் துரும்பும் அருகிலிருக்கும் உப்பளத்தில் விழுவதைப் பற்றிக் குடவாயிற் கீரத்தனார். மருதநிலப் பாடலொன்றில் கடுங்காற்று எறிய போகிய துரும்பு உடன் எனக் குறிப்பிட்டுள்ளார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரை மருதன் இளநாகனார் வாழ்த்திப் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலில் பெருங்காற்றுத் திரட்டுவதால் குவிந்தும், சுவடுகள் பதிவதுமான மணல் மேடு பற்றி கடுவளி தொகுப்ப ஈண்டிய வடு ஆழ் எக்கர் மணலினும் பலவே! எனக் குறிப்பிட்டுள்ளார். கரையில் நண்டுகள் விளையாடியதால் உண்டாகிய சுவடுகளை மறைக்கின்ற வகையில் நுண்ணிய மணலை காற்று எடுத்து வருவதைப் பற்றி பதிற்றுப்பத்து அலவன் ஆடிய வடு அடு நுண் அயிர் ஊதை உஞற்றும் குறிப்பிடுகிறது.

மலைவழியின் பக்கத்தே பெருங்காற்று வீசுவதால் திரண்ட அடிப்பகுதியையும் சிறிய இலைகளையும் உடைய நெல்லியின் வடுவிலா பசிய காய்கள் உதிர்ந்து பொன்னாலான காசுகள் போல பாலைப் பரப்பில் பரவிக் கிடப்பதை,

. . . . . . நெல்லில் புகர்இல் பசுங்காய்

கல் அதர் மருங்கிலு கடுவளி உதிர்ப்ப (அகம்.363:6-7)

மதுரை பொன் செய்கொல்லன் வெண்ணாகனார் பாடியுள்ளார். வாழை மரத்தின் இலைகளைக் காற்று அசைத்தலால் அவ்வாழையிலை யானையின் முதுகைத் தடவுதலை,

சிலம்பில் போகிய செம்முக வாழை

அலங்கல் அம்தோடு அசைவளி வறுதொறும்

பள்ளி யானைப் பரஉப்புறம் தைவரும் (அகம்.302:1-3)

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரும் சூறாவளிக் காற்றுச் சுழன்று அடித்தலால் அசையும் கிளைகளையுடைய நார் இல்லாத முருங்கையின் குலைந்த வெண்பூக்கள் உடைந்த கடல் அலையின் வெண்மையான துளிகளைப் போல் பரந்து கிடப்பதை,

நார் இல் முருங்கை நவிரல் வான் பூச்

சூரல் அம் கடுவளி எடுப்ப. . . . . (அகம்.1:16-17)

மாமூலனாரும் பாடியுள்ளனர்.

காற்றால் ஆடும் மீன்பிடி வலைகள் பற்றிய நக்கீரர்,

. . . . நெடுவலை

தண்கடல் அசைவளி எறிதொறும் (அகம்.340:21-22)

எனக் குறிப்பிடுகிறார். இந்நிலையைக் குறிப்பிடும் காற்றால் எழும்பும் அலைகள் பற்றி நற்றிணையில்,

வலையும் தூண்டிலும் பற்றி பெருங்கால்

திரை எழு பௌவம் முன்னிய

கொலை வெஞ் சிறாஅர் பாற்பட்டனளே (நற்.207:10-12)

என பெருங்காற்று வீசும் காலத்தில் அலை பொங்கி வீசுதல் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. மதுரைக்காஞ்சியில் பெரிய காற்று வீசுவதால் ஏற்படும் கடலின் ஒலி பற்றி மா கல் எடுத்த முந்நீர் போல என்ற குறிப்பு உள்ளது. அசைகின்ற நீரையுடைய அகன்ற கடற்பரப்புக் கலங்கும் படி காற்று அடித்தலால் விளங்குகின்ற பெரிய அலைகள் பற்றி பதிற்றுப்பத்தில் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைப் புகழ்ந்து பாடியுள்ள பாடலில்,

துளங்கு தீர் வியலகம் கலங்கக் கால்பொரா

விளங்கு இரும் புணரி உரும் என முழங்கும்

கடல் சேர் கானற் குட புலம் முன்னி (பதிற்.51:1-3)

எனக் குறிப்பிடுகிறார்.

தீயும் காற்றும்

காடுகளில் உள்ள மரங்கள், சனவரி, பிப்ரவரி (பின்பனிக் காலம்) மாதங்களிலேயே வறண்ட வானிலை காரணமாக, நீர் இலைகளின் மூலம் ஆவியாதலைத் தடுக்க தங்களின் இலைகளை உதிர்ந்து விடும். இவ்வாறு உதிர்க்கப்படும் இலைகள் மண்ணில் விழுந்து மக்கி ஒருவித எரியக்கூடிய வாயுவை உற்பத்தி செய்கின்றன. கோடை வெப்பத்தில் இந்த வாயு எரியத் தொடங்குகிறது. கிடைமட்ட வெப்பச் சலனத்தால் ஏற்படும் வலுவான வெப்பக் காற்று இத்தீ மேலும் பரவ வழிவகை செய்கிறது. கோடைக்காலத்தில் மரங்கள் நீரின்றி உலர்ந்து இருப்பதால் அவையும் எரிகின்றன. சில சமயங்களில் கோடை மழைபெய்யும் போது மின்னலால் தாக்குண்டு மரங்கள் எரியும். ஆனால் பொதுவாக மழையால் இவ்வகையான தீ பரவுவது தடுக்கப்படும். சில சமயங்களில் காட்டிலுள்ள மரங்கள் காற்றால் ஒன்றோடொன்று வாய்வதாலும் காட்டுத் தீ ஏற்படுவதுண்டு. இங்ஙனம் காட்டுத்தீ காற்றால் தோன்றுவது பற்றியும் பரவுவது பற்றியும் சங்க இலக்கியத்தில் பல இலக்கியத்தில் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

தழைத்த மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் அம்மூங்கில் சொரியும் ஒளி பொருந்திய தீப்பொறி மிகுதியான சருகுகள் மறையம்படி மூண்டெழுந்தது. செங்குத்தாய் நிற்கும் உலர்ந்த ஊகம் புல்மீது காற்றுச் சுழன்று அடித்துப் பரவச் செய்யக் காட்டைத் தன் கைப்படுத்தி எரியும் பெரிய தீயானது. காற்று வீசும் இடமெல்லாம் சென்று பரவியதால் அந்தச் சுரவழிச் சென்ற வாணிக சாத்தர் அலறி ஓடியதை,

ஒலி கழை பிசைந்த ஞெவி சொரிஒண் பொறி
பட ஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளி புல் மீமிசை வளி கழற்றுறாஅக்
காடு கவர் பெருந் தீ ஓடுவயின் ஓடலின்
அதர் கெடுத்து அலறிய சாத்தோடு. . . . . *(அகம்.39:6-10)*

என்று அகநானூற்றில் மதுரைச் செங்கண்ணனார் பாடியுள்ளார். மூங்கில்கள் உராயும்படி காற்று வீசியதால் எழுந்த நீரானது மலைப்பக்கங்களில் பரவியது பற்றி,

அலங்கு கழை நரலத் தாக்கி விலங்க எழுந்து
கடு வளி வரத்திய கொடி விடு சுடர் எரி
விடர் முகை அடுக்கம் பாய்தலின் *(அகம்.47:4-6)*

என்று ஆலம்பேரி சாத்தனார் அகநானூற்றில் குறிப்பிடுகிறார். தேக்குமர இலைகள் காற்றால் உதிர்ந்து கிடந்த காட்டில், காய்ந்த தூறுகளில் தோன்றிக் காற்றினால் வளர்க்கப்பட்ட தீயின் கொழுந்து மேலே எழுந்து மலைப் பிளவுகளாகிய குகைகளில் புகுந்து முழங்கும் என்பதனை,

. . . . கடுங்கதிர் தெறுதலின்
நீமசினை வறிய ஆக ஒல்லென
வாடுபல் அகல்இலை கோடைக்க ஒய்யும்
தேக்கு அமல் அடுக்கத்து ஆங்கண் மேக்கு எழுபு
முளிஅர் பிறந்த வளிவளர் கூர்எரிச்
சுடர்நிமிர் நெடுங்கொடி விடர்முகை முழங்கம்
வெம்மலை. . . . . *(அகம்.143:2-8)*

என்றும் இவரே மற்றோர் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிடுகிறார்.

வேனிற் காலத்துச் சுடுகின்ற கதிரவனின் வெம்மை காய்ந்து கெடுத்த கானகத்தில், வீசும் பெருங்காற்று தழைத்த மூங்கிலின் கணுக்களைப் பொருந்தித் தாக்கும். அதனால் சிதறி வீழ்ந்த தீப்பொறிகள் தோற்றுவித்த பெருநெருப்பால் பசுமையிழந்த மலை உச்சிகளையுடைய பயனற்ற சுர வழிகள் பற்றி,

தெறிகதிர் உலைஇய வேனில் வெங்காட்டு
உறுவளி ஒலிகழைக் கண்உறுபு தீண்டலின்
பொறிபதிர்பு எடுத்த பொங்குஎழு கூர்எரிப்
பைதுஅறு சிமையப் பயம்நீங்கு ஆர்இடை *(அகம்.153:8-11)*

எனக் சேரமான் இளங்குட்டுவன் பாடியுள்ளார். முருக்க மரத்தின் செந்நிறப் பூக்களால் சூழப்பெற்ற பெருங்கல் காட்டில் நெருப்பால் சூழப்பெற்ற யானை போல் தோன்றுவதை,

தனைமுதிர் முருக்கின் சினைசேர் பொங்கர்

காய்சினைக் கடுவெளி எடுத்தலின் வெங்காட்டு

அழல்பொழி யானையின் ஐயெனத் தோன்றும் (அகம்.223:5-7)

எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோ ஓர் பாடலில் குறிப்பிடுகிறார். அவரே மற்றொரு பாடலில் காட்டுத்தீ பரவி அழித்தமையால் இலையற்ற மரங்களையுடைய காட்டு வழி பற்றி,

செலவுவலி யுறுத்தணை அயின் காலொடு

கனைஎரி நிகழ்ந்த இலைஇல் அம்காட்டு (அகம்.379:18-19)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

வாணிகக் காற்றுகள்

காற்று பற்றிய சங்க இலக்கியச் செய்திகளைப் பார்க்கும் போது வாணிகக் காற்றுகள் பற்றிய செய்திகளும் காணக் கிடைக்கின்றன. சங்ககாலத் தமிழர் கடல் கடந்து வாணிகம் செய்தனர். மயிலைசீனி.வேங்கடசாமி, சாத்தான்குளம், அ.இராகவன், பா.செயக்குமார், முனைவர் ப.சண்முகம் தமிழ்நாட்டு வரலாற்றுக்குழுவினர், தரசய்யா ஆகியோரின் படைப்புகளில் பழங்காலத் தமிழரின் கடல் வாணிகம், அவர்களின் வாணிகக் காற்றுகள் பற்றிய அறிவு ஆகியவை குறிப்பிட்டிருக்கின்றன.

வாணிகக் காற்று என்பது நிலநடுக்கோட்டிற்கு வடக்கிலும் தெற்கிலும் தென்கிழக்கு மற்றும் வடகிழக்குத் திசையிலிருந்து வீசக் கூடியது. இவ்வகைக் காற்றுகள் பூமிப் பந்தின் பிற கடற்பகுதிகளில் வீசும் வாணிகக் காற்றுகளுக்கு மாறாக அரபிக்கடல், வங்கக்கடல் பகுதிகளில், தென்மேற்குப் பருவமழைக் காலத்திலும் வடகிழக்குப் பருவமழைக் காலத்திலும் முறையே தென்மேற்குத் பருவமழைக் காலத்திலும், வடகிழக்குப் பருவமழைக் காலத்திலும் முறையே தென்மேற்குத்திசையிலிருந்தும் வடகிழக்குத் திசையிலிருந்தும் வீசக்கூடிய காற்றோட்டமாகும். வாணிகக் காற்று என்ற சொல் டிரேட் விண்ட்ஸ் என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம், ஆங்கிலச் சொல்லில் உள்ள டிரேட் என்ற பகுதி பாதை என்ற பொருள் தரும் ட்ராக் அல்லது பாத் *(Track or Path)* என்ற ஆங்கிலச் சொல்லிலிருந்து பிறந்தது. வீசுகின்ற காற்று கப்பல்களை ஒரு குறிப்பிட்ட கடல்வழியில் இட்டுச் செல்லுவதைக் குறிக்க இச்சொல் தோன்றியது. பெரும்பாலும் வணிகக் கப்பல்களின் பயணத்திற்கு இக்காற்றுகள் உதவி செய்வதால் வாணிகக் காற்று எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது எனலாம்.

பல்வேறு நாடுகளிலிருந்து காற்று வீசுவதால் வந்த கப்பல்கள் பற்றி நற்றிணையில்,

வேறு பல் நாட்டுக் கால் தர வந்த

பல வினை நாவாய் தோன்றும் பெருந் துறை (நற்.295:5-6)

என ஔவையாரும் உலகமே கிளர்ந்து எழுந்தாற் போன்று அச்சம் பொருந்திய (பெரிய கப்பல்) நாவாயினை வேகமாக வீசும் இயல்பினதாய் காற்று அசைத்து செலுத்துதல் பற்றி,

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்

புலவுத்திரைப் பெருங்கடல் நீர்இடைப் போழ

இலவும் எல்லையும் அசைவுஇன்று ஆகி

விரை செலல் இயற்கை வங்கூழ் ஆட்ட (அகம்.255:1-4)

என அகநானூற்றில் மதுரை மருதன் இளநாகனாரும், நீர் செறிந்த பெரிய கடலிடத்தே மரக்கலம் செலுத்தியும் அது அசையாத போது காற்றினை ஏவல் கொண்டும்,

நளி ஈரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளி தொழில் ஆண்ட உரவோன் மருக! (புறம்.66:1-2)

ஆட்சி நடத்திய சோழன் கரிகாற் பெருவளத்தான் பற்றி வெண்ணிக் குயத்தியாரும் பாடியுள்ளனர். சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் சோழன் வேற்புல் தடக்கை பெருநற் கிள்ளியோடு பொருது வீழ்ந்து கிடத்தலைப் பாடும் கழாத்தலையார் உடுக்களுடன் களத்திலே கிடக்கும் குதிரைகள், காற்றின் இயக்கம் இன்றிக் கிடக்கும் கலங்கள் போல உள்ளதாக,

வளி வழக்கு அறுத்த வங்கம் போல (புறம்.368:9)

எனப் புறநானூற்றில் கூறுகிறார்.

தொகுப்புரை

- பண்டைக்காலம் தொட்டே தமிழர்கள் வானியல் பற்றிய அறிவினைப் பெற்றிருந்தனர். அண்டம் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் அதிகம் கூறப்பட்டுள்ளன.
- மண்டல கிரகங்களான சந்திரன் உவமைக்குப் பல இடங்களில் எடுத்தாளப்படுகின்றன.
- ஐம்பெரும்பூதங்களான நிலம், ஆகாயம், காற்று, தீ, நீர் பற்றிய கருத்துக்கள் தற்போது கூறப்பட்டு வரும் அறிவியல் உண்மைகளை எல்லாம் சங்க இலக்கிய பாடல் அடிகள் மூலம் அறியமுடிகின்றன.
- பண்டையப் புலவர்கள் காற்று எத்திசையிலிருந்து வருகிறது என்பதன் முக்கியத்துவத்தினை அறிந்திருந்தனர். ஆகவே கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு திசையிலிருந்து வீசும் காற்றிற்கு முறையே கொண்டல், கோடை, வாடை, தென்றல் எனப் பெயரிட்டிருந்தனர். காற்றிற்கு வலிமை உண்டு என்பதனையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

துணைநூற் பட்டியல்

ஆனந்தன், சு. தமிழ் இலக்கிய வரலாறு, கண்மணி பதிப்பகம், திருச்சி, 2002.

இராகவையங்கார், இரா., குறுந்தொகை, கவின்கலை அச்சகம், சென்னை, 1993.

இராசா, ஆ.வே., திருக்குறள், திருவள்ளுவர் பதிப்பகம், வைரி செட்டிப் பாளையம், 2001.

இராசா, கி. தமிழர் இலக்கிய வரலாறு, அன்னை நிலையம், திருச்சி, 2001.

இராமகிருட்டிணன், ஆ., தமிழக வரலாறும், தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 2004.

இளம்பூரணர் (உ.ஆ.). தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

சாமிநாத ஐயர், உ.வே., புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

சிங்கார வேலன், சொ., தொல்காப்பியம், கழக வெளியீடு, சென்னை, 1998.

சிதம்பரனார், சாமி., எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அப்பர் அச்சகம், சென்னை, 1943.

சுப்பிரமணியன், ச.வே., தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

செயபால், இரா., அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

சோமசுந்தரனார், பொ.வே., புறப்பொருள் வெண்பாமாலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2002.

ஞானசம்பந்தன், அ.ச., இலக்கியக் கலை, அப்பர் அச்சகம், சென்னை, 1955.

நாராயண வேலுப்பிள்ளை, ம., பதிற்றுப்பத்து, கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை, 1994.

பாரதிதாசன், தேனருவி, பாரி நிலையம், சென்னை.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). அகநானூறு, பாரி நிலையம், சென்னை, 1960.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). குறுந்தொகை, பாரி நிலையம், சென்னை, 1980.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை, 1978.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). நற்றிணை, பாரி நிலையம், சென்னை, 1980.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). புறநானூறு, பாரி நிலையம், சென்னை, 1958.

மாணிக்க வாசகன், ஞா. (உ.ஆ.). சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை, 1995.

மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1962.

மோகன், இரா., சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, திருவள்ளுவர் கணிப்பொறி அச்சகம், தஞ்சாவூர், 2004.

References

Ananthan, S. Tamil Ilakkiya Varalaru, Kanmani Pathippagam, Trichy, 2002.

Ragavaiyengar, R., Kurunthogai, Kavinkalai Achagam, Chennai, 1993.

Rasa, A.V., Thirukkural, Thiruvalluvar Pathippagam, Vairi Chetti Palayam, 2001.

Rasa, Ki. Tamilar Ilakkiya Varalaru, Annai Nilayam, Trichy, 2001.

Ramakritinan, A., Tamilaga Varalarum, Tamilar Panpadum, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, 2004.

Ilampooranar (Ed.). Tholkappiyam, Porulathikaram, Saratha Pathippagam, Chennai, 2005.

Saminatha Iyer, U.Ve., Purananooru Moolamum Uraiyum, Tamil University, Thanjavur, 1985.

Singaravelan, So., Tholkappiyam, Kazhaga Veliyeedu, Chennai, 1998.

Chidambaranar, Sami., Ettuthogaiyum Tamizhar Panpadum, Appar Achagam, Chennai, 1943.

Subramaniyan, S.Ve., Tholkappiyam, Manivasagar Pathippagam, Chennai, 1998.

Jayabal, R., Aganaooru, New Century Book House, Chennai, 2004.

Somasundaranar, P.V., Puraporul Venbamalai, Thirunelveli Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam, Chennai, 2002.

Gnanasambandan, A.S., Ilakkiya Kalai, Appar Achagam, Chennai, 1955.

Narayana Velupillai, M., Pathitrupathu, Kannappa Art Printers, Chennai, 1994.

Bharathidasan, Thenaruvi, Pari Nilayam, Chennai.

Puliyoorkesikan (Ed.). Agananooru, Pari Nilayam, Chennai, 1960.

Puliyoorkesikan (Ed.). Kurunthogai, Pari Nilayam, Chennai, 1980.

Puliyoorkesikan (Ed.). Silappathikaram, Pari Nilayam, Chennai, 1978.

Puliyoorkesikan (Ed.). Natrinai, Pari Nilayam, Chennai, 1980.

Puliyoorkesikan (Ed.). Purananooru, Pari Nilayam, Chennai, 1958.

Manickavasagan, G. (Ed.). Silappathikaram, Uma Pathippagam, Chennai, 1995.

Manickam, V.Suba., Tamil Kathal, Pari Nilayam, Chennai, 1962.

Mohan, R., Sanga Ilakkiyam, Pathupattu, Thiruvalluvar Kanippori Achagam, Thanjavur, 2004.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com